# முள்ளில் உதைக்கிறது (25:13-26:32)

*தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமான பொழுது, "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" (26:14ஈ) என்று கூறினார். அந்த நாட்களில் நன்கு அறியப்பட்டதும் இந்த நாட்களிலும் கூட பழக்கமானதுமான ஒரு விவசாய உருவகத்தை இயேசு பயன்படுத்தினார். ஆறிலிருந்து எட்டடி வரை நீளம் கொண்ட சாட்டை யொன்றின் நுனியில் கூர்மையான பாகம் இருக்கும். கைப்பிடிக் கலப்பையினால் விவசாயி ஒருவர் நிலத்தை உழுகின்றபோது, தமது இன்னொரு கையில் அந்தச் சாட்டையை வைத் திருப்பார். அந்தச்சாட்டையைக் கொண்டு அவர் தமது காளை மாட்டை வேகமாய்ப் போகச் செய்யவும், ஒரு புறமிருந்து மறுபுறத்திற்குத் திரும்பச் செய்யவும் முடியும். சில வேளை களில் அடங்காத காளையொன்று விவசாயியைத் திரும்ப உதைக்கும், ஆனால் அவ்வாறு அது செய்யும் இடர்ப்பாட்டிற்கு இன்னும் அதிகமான தண்டனை கிடைக்கும் - இது முந்தியதை விடக் கடினமானதாக இருக்கும். முள்ளில் உதைக்கிறது கடினமானதாகும்!*

*கிரேக்க மற்றும் இலத்தீன் மொழி பேசுவோர் "முள்ளில் உதைக்கிறது" என்பதை தங்கள் "கடவுள்களின்" சித்தத்திற்கு எதிராகப் போராடுவதைக் குறிப்பிடப் பயன்படுத்தினார்கள். பவுலுக்கு, இந்த வார்த்தைகள் ஒரு குற்றச்சாட்டாய் இருந்தன, ஏனென்றால் அவை அவர் உண்மை தேவனுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்ததாகக் கூறின. பவுல் செல்வதற் கென்று யேகோவா வேறொரு திசையை வைத்திருந்தார், ஆனால் அவர் தமது வாழ்வுக்காகத் தேவனுடன் போராடிக் கொண்டிருந்தார் - அது மிகக் கடினமாய் இருந்தது!*

*இப்பொழுது நாம், தேவன் அவரை அதிசயிக்கத் தக்க வகையில் பிடித்த வழியில் எப்படி "சிட்சித்தார்" - மற்றும் பவுல்*

அவ்வரலாற்றை ஒரு அரசபரம்பரைப் பார்வையாளரை "வழி நடத்த" எவ்விதம் பயன்படுத்தி ஆவிக்குரிய உண்மை நிலையைக் காண வைத்தார் - என்பதைப் பார்ப்போம். நீங்கள் வாசிக்கையில் கவனமாய் இருங்கள்: இந்தப் பாடத்தைக் கர்த்தர் தமது வழியில் உங்களைச் சிட்சிப்பதற்குப் பயன்படுத்தலாம் (இது ஒரு உணர்வுப் பூர்வமான ஆனால் அபாயகரமான வழியாய் இருக்கலாம்). இதை நீங்கள் எதிர்பாராமலும் இருக்கலாம்!

## சூழ்நிலை (25:13-26:1)

செசரியாவின் சூழ்நிலையை மறுகண்ணோட்டமிட்டு நாம் தொடங்குவோம். சில நாட்களுக்கு முன்பு இளம் அரசர் அகிரிப்பாவும், அவரது சகோதரி பெர்னீக்கேயாளும் யூதேயாவின் புதிய தேசாதிபதியாக வந்த பெஸ்துவுக்கு மரியாதை செலுத்த வேண்டி அங்கு வந்திருந்தார்கள் (25:13).

அகிரிப்பா தன் தகப்பனார் மரித்தபோது, பதினேழு வயதுடையவராய் இருந்தார், எனவே தன் தகப்பனாருடைய பரந்து விரிந்த அரசுப் பகுதியை ஆள அவருக்கு உரிமை கிடைக்காதிருந்தது. மாறாக, ஒரு சில வருடங்களுக்குப் பிறகு வடக்குப் பலஸ்தீனத்தில் குறிப்பிடத் தக்கதல்லாத ஒரு சிறு பகுதி அவருக்குத் தரப்பட்டது. வருடங்கள் ஆக, ஆக, கூடுதலான நிலப்பகுதி அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவரது தகப்பனாருடைய அரசுப் பகுதியுடன் ஒப்புடுகையில் அவரது அரசுப் பகுதியானது அற்பமானதாகவே இருந்தது. இருப்பினும், யூத மக்களின் மத்தியில் அவர் கணிசமான செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர் யூத இரத்தமுடையவராய் இருந்தார், ரோமாபுரி அரசானது அவரை எருசலேம் தேவாலயத்தின் பாதுகாவலராக நியமித்து பிரதான ஆசாரியரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் கொடுத்திருந்தது. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும், யூத விசுவாசத்தின் உலகப் பிரகாரமான தலைவராக அவர் விளங்கினார்.

சுய திருப்திக்காக வாழ்ந்த அவர் ஒரு தனி வகைப்பட்ட ஏரோதாக இருந்தார். அவர் தமது அழகிய சகோதரியான ஜூலியா பெர்னீக்கேயாளுடன், பிரமாணத்தினால் தடை செய்யப்பட்டிருந்தும் (லேவி. 18:1-18; 20:11-21) வெளிப்படை

*யான பாவத்தில் வாழ்ந்திருந்ததென்பது அவரது மிக இழிந்த துணிகரச் செயலாய் இருந்தது. பழங்கால எழுத்தாளர்களின் கருத்துப்படி, இந்த உறவுமுறையானது "யூதர்கள் மற்றும் புறஜாதியார்களின் மத்தியில் களங்கமான செயலாக இருந்தது."[1]*

*பெர்னீக்கேயாள் பதிமூன்று வயதிலேயே தனது சிற்றப்பா ஒருவரைத் திருமணம் செய்து கொண்டாள். அவர் கணவர் இறந்த பொழுது, அவள் திருமணமாகாத தனது சகோதரருடன் வாழ வந்து, அவரது அரசியாகச் செயல்பட்டாள்.[2] ஒருமுறை அவள் - தன்னைப் பற்றிய தடை செய்யப்பட்ட பாவம் செய்கிறாள் என்ற வதந்திகள் எல்லாவற்றையும் நிறுத்துவதற் காக - மறுமணம் செய்து கொண்டாள், ஆனால் அகிரிப்பாவை விட்டு அவளால் விலகியிருக்க முடியவில்லை. எனவே விரை விலேயே அவள் தனது கணவனைக் கைவிட்டு, தனது சகோதர னைச் சேர்த்துக் கொண்டாள்.[3]*

*கர்த்தருடைய வழிக்குத் திரும்பிக் கொண்டு வரப்பட வேண்டியவர்கள் எல்லாருடைய அட்டவணையில் அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாளுடைய பெயர்களானது முதலில் காணப்பட வேண்டியதாயிருந்தது! அவர்கள் தேசாதிபதியுடன் பல நாட்களைக் கழித்த பிறகு, பெஸ்து "பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து ...." (வ. 14) எப்படிச் செயல்படுவது என்பதில் தமக்கு "சந்தேகமிருந்த"து (வ. 20) என்று ஒப்புக் கொண்டார். அகிரிப்பா, பவுல் பேசுவதைத் தாமே கேட்க வேண்டும் என்று கூறினார், அதற்குப் பெஸ்து மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார் (வ. 22).*

*ஏரோது குடும்பத்தில் இரு உறுப்பினர்கள் அரண்மனைக்கு வந்திருந்தார்கள் என்ற செய்தியானது பவுலுக்கு எட்டியிருந் திருக்கும் என்பது உறுதி. அவர்கள் தமது தலை வெட்டப் படுவதைக் காண விருப்பம் கொண்டார்கள் என்று கேள்விப் படப் பவுல் ஆச்சரியமடைந்திருக்க மாட்டார் (மத். 14:3-12ஐக் காணவும்), ஆனால் தாம் பிரசங்கம் செய்வதை அகிரிப்பா கேட்க விரும்பினார் என்று அறிந்த பொழுது அவர் திகைப் படைந்திருப்பார்! பவுலின் உணர்வெழுச்சியை* J. W. *மெக்கார்வி அவர்கள் கற்பனை செய்ய முயற்சி செய்தார்:*

*இரத்தக்கறை படிந்த ஏரோது குடும்பத்திலிருந்து ஒருவர்*

... சுவிசேஷத்தைக் கேட்க உண்மையிலேயே விருப்பம் கொண்டிருந்தது ... அதன் மூலம் கிறிஸ்துவுக்கும் அக்குடும்பத்திற்கும் இடையில் உள்ள பெரும் இடை வெளியானது இணைக்கப்பட முடிந்ததா? ... கிறிஸ்து வுக்காக ஒரு ஏரோதுவை ஆதாயம் செய்வது என்ற அரிய சாத்தியக் கூறானது அவரது ஆத்துமாவைக் கிளர்ச்சியுறச் செய்திருக்க வேண்டும்.

அந்த இரவில் பவுல் அநேகமாக நன்றாய்த் தூங்கியிருக்க மாட்டார். கடைசியாக, அகிரிப்பாவை மனமாற்றமடைய முயற்சி செய்ய வாய்ப்புக் கிடைக்கும் நாள் விடிந்தது!

மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து சேனாதிபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங் கூட நியாய ஸ்தலத்தில் பிரவேசித்தார்கள். உடனே பெஸ்துவினு டைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான் (அப். 25:23).

கபடமற்ற ஒப்புதல் ஒன்றுடன் பெஸ்து தமது செயல் பாட்டைத் தொடங்கினார்:

... அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே, நீங்கள் காண்கிற இந்த மனுஷனைக் குறித்து யூதஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள்.[4] இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்து கொண்டதினாலும், இவன்தானே இராயனுக்கு அபய மிட்டபடியினாலும், அவரிடத்தில் இவனை அனுப்பும் படி தீர்மானம் பண்ணினேன்.[5] இவனைக் குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரிய மொன்றும் எனக்கு விளங்கவில்லை. காவல் பண்ணப் பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக் காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே, இவனை விசாரித்துக் கேட்ட பின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும்,

*விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்கு முன்பாகவும் கொண்டு வந்தேன் என்றான் (வ. 24-27).*

*பவுலைத் தேசாதிபதி விடுவிக்கத் தவறியது - விசேஷமாக "மரணத்திற்குப் பாத்திரமானதொன்றையும் அவர் செய்திருக்க வில்லையென்று கண்டறிந்த பின்பும்" கூட அவரை விடுதலை செய்யத் தவறியது - என்பது மிகவும் அபத்தமானதாகும்![6]*

*அந்த வேளையானது முறையான விசாரணையாயில்லாமல் வழக்கமான முறையில் அமைந்திராத ஒரு கேள்விப்படுதலாய் இருந்ததாலும், அகிரிப்பா பவுல் பேசுவதைக் கேட்க விரும்பிய தாலும், அகிரிப்பா பேட்டியை நடத்தும்படி பெஸ்து அனுமதித் தார். அகிரிப்பா பவுலை நோக்கி: "நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது என்றான்" (26:1அ).*

## *பிரசங்கம் (26:1-23)*

*உலகத் தராதரத்தின்படியாக மிகச் சிறப்பு வாய்ந்த கூட்டத்தாரின் முன்னிலையில் பேசும் சிலாக்கியத்தைப் பெற்றவராய் பவுல் நின்றிருந்தார். நானாயிருந்தால் என் காலணிகளுக்குள் நடுங்கிக் கொண்டிருந்திருப்பேன், ஆனால் அவர் அப்படி நடுங்கவில்லை. மேற்கத்திய வசனநடையில் இவ்விடத்தில், அவர் "தைரியமாகவும், பரிசுத்த ஆவியான வரால் ஊக்கப்படுத்தப்பட்டவராகவும்" இருந்தார் என்று குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. "அப்பொழுது பவுல் கையை நீட்டி,[7] தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்கினான்" (அப். 26:1ஆ).*

*பவுல் தமது வழக்கை அரசர் விசாரிப்பது பற்றிய தமது மகிழ்ச்சியை முதலில் வெளிப்படுத்தினார்:*

> *அகிரிப்பா ராஜாவே, யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக் குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப் போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன். விசேஷ மாய் நீர் யூதருடைய சகலமுறைமைகளையும் தர்க்கங் களையும்[8] அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்; ஆகையால் நான் சொல்வதைப் பொறுமையோடே கேட்கும்படி[9] உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் (வ. 2, 3).*

*சூழ்நிலையைப் புரிந்து கொண்டவராயிருந்து, தம்மைப் புரிந்து கொள்ளக்கூடியவராயிருந்தவருக்கு முன்பாக கடைசியில் தாம் நின்றது பாக்கியமானதென்று கருதியதாகப் பவுல் காரணம் தெரிவித்தார். (பவுல் போலிப் புகழ்ச்சியில் ஈடுபடவில்லை; அகிரிப்பா யூதத்துவம் பற்றிய அறிவுடையவராய் இருந்ததைப் பழங்கால யூத எழுத்தாளர்கள் உறுதி செய்துள்ளனர்.)*

*அரசருக்கு முன்பாக நின்றது மகிழ்ச்சியானது என்பதற்குப் பவுல் வெளியில் கூறப்படாத இன்னொரு காரணத்தையும் பெற்றிருந்தார்: அவரை மனமாற்ற வேண்டும் என்பதில் பவுல் தமது முழு இருதய விருப்பத்துடன் இருந்தார்! அகிரிப்பாவை மனமாற்றுவதா? கொள்கையற்ற ஏரோது ஒருவரை மனமாற்றுவதா? எல்லாருக்கும் முன்பாக உணர்வற்றுப் போய் துணிகரமாகக் களங்கமான வாழ்வு நடத்திக் கொண்டிருந்த ஒருவரை மனம்மாற்றுவதா? நிச்சயமாகவே அந்த அயோக்கியர் மீட்புக்கு அப்பால் இருந்தார்! பவுலோ அப்படி நினைக்க வில்லை (2 பேது. 3:9)!*

*பவுலைப் பொறுத்தமட்டில், அவர் உரையைக் கேட்கும் அகிரிப்பா*[10] *என்ற ஒருவரைப் பெற்றிருந்தார். நடபடிகளில் காணப்படும் வேறு எந்தப் பிரசங்கமும் இந்த அளவு தனி நபருக்குரியதல்ல. பவுல் மறுபடி மறுபடி அகிரிப்பாவைப் பெயர், பட்டப் பெயர் மற்றும் "நீர்" என்று சிறப்புப் பெயர்ச் சொல் முதலியவற்றால் அழைத்தார் (வ. 2, 3, 7, 13, 19, 26, 27, 29). பவுலின் பிரசங்கத்தினுடைய வலிவைப் புரிந்து கொள் வதற்கு முகமுகமாய் நோக்கும் இவ்விருவரையும் கற்பனை செய்து பாருங்கள்: விலங்கிடப்பட்டுள்ள முதியவர், ஆடம்பர உடையணிந்த இளைஞர்; உணர்வூட்டம் பெற்ற பிரசங்கியார், வெறுமையான ஊதாரி; தமது பயண முடிவில் இருந்த ஒருவர், பயணத் தொடக்கத்தில் இருந்த ஒருவர். ஒருவேளை பவுல் தமது முந்திய நிலைமையை அகிரிப்பாவில் கண்டிருக்கலாம் - அப்போது அவர் இளைஞராக, பணக்காரராக, உறுதியான யோசனையுள்ளவராக, சக்தி நிறைந்தவராக ஆனால் தவறான திசையில் சென்று கொண்டிருந்தவராயிருந்தார்; பிரமாணத்தை அறிந்திருந்தும் அதன் நோக்கத்தை அறியாதவராக இருந்தார்; ஆராய்ந்து பாராமல் கிறிஸ்தவத்தை எதிர்ப்பவராய் இருந்தார். அந்த அப்போஸ்தலர் மனம் மாற்றத்தின் பொழுது என்ன வயதுடையவராய் இருந்தாரோ அதே வயதுடையவராய்*

*அகிரிப்பா இப்பொழுது காணப்பட்டார் என்ற சிந்தனையா னது அந்த அப்போஸ்தலருடைய இருதயத்தில் நுழைந்ததா? எனக்குத் தெரியாது, ஆனால் இது மாத்திரம் எனக்குத் தெரியும்: பவுலின் வழிப்படி இருந்திருந்தால், அந்த நாள் முடியு முன்னதாக, அந்த இளம் இராஜா ஒரு கிறிஸ்தவராகியிருப்பார் (வ. 28, 29)!*

*மேம்போக்காகப் பார்த்தால், பவுலின் தற்காப்பு வாத மானது முக்கியமாக அவரது அனுபவங்களைப் பற்றிய உரையாடலாகக் காணப்படுகின்றது, இருப்பினும் அவரது வார்த்தைகள் அவரைப் பாதுகாக்கும் தற்காப்பு வாதமா யிராமல், உயிர்த்தெழுந்த கர்த்தருக்காக எழுப்பப்பட்ட வாதமாகவே இருந்தது (2 கொரி. 4:5ஐக் காணவும்). எப்படி யிருந்தாலும், நான்கு தன்மைக் கூற்றுகள் அவரது எடுத் துரைப்பைச் சுருக்கமாய் விளக்குகின்றன:*[11]

***"நான் பரிசேயனாய் நடந்தேன்" (26:4-11)***

*பவுல் தாம் ஒரு இளைஞராயிருந்து யூத விசுவாசத்தில் வாழ்ந்திருந்த நாட்களைப் பற்றி 26:4, 5ல் பேசினார். "யூத ஜனங்களெல்லாரும் ..." பவுலைக் கண்டனம் செய்திருந்ததாக (25:24) பெஸ்து கூறியிருந்தார். அதைப் பவுல் எதிர்த்து நின்று, "யூதஜனங்களெல்லாரும்" உண்மையைக் கூறுவதாயிருந்தால் அவரைக் கண்டனம் செய்வதற்குப் பதிலாகப் பாராட்டியிருக்க வேண்டும் என்று கூறினார்.*

> *நான் என் சிறுவயது முதற்கொண்டு, எருசலேமிலே என் ஜனத்தாருக்குள்ளே இருந்தபடியால், ஆதி முதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள். நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சி சொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம் (26:4, 5).*

*பவுல் தமக்கெதிராய்க் கூறப்பட்ட குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளைத் தமது தற்காப்பு வாதத்தில் நேரடியாகக் குறிப் பிடவில்லை; ஆனால் அவரின் எடுத்துரைப்பானது அவர் யூதர்களைத் தவறாக நடத்தவில்லையென்பதையும், நியாயப் பிரமாணத்தை இகழவில்லை என்பதையும், அல்லது தேவா*

*லயத்தைத் தீட்டுப்படுத்தவில்லை என்பதையும் வலியுறுத்தின. பரிசேயர் என்ற வகையில் தம் வாழ்க்கை பற்றிய குறிப்புடன் பவுல், பிதாக்களின் நம்பிக்கை மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய கருத்துக்களை அறிமுகப்படுத்தினார், ஏனென்றால் வசனத்தின் வாக்குத்தத்தங்களையும் மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் பரிசேயர்கள் நம்பினார்கள் (23:6, 8).*

> *தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரெண்டு கோத்திரத் தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ் சாட்டுகிறார்கள் (வ. 6, 7).*

*பெரும்பாலான யூதர்கள் எதை நம்பியதாக உரிமை கோரினார்களோ அதை உண்மையில் தாம் நம்பியது என்பதே தாம் விசாரணை செய்யப்படுவதற்கு உண்மையான காரணம் என்று வலியுறுத்தினார். "தேவன் பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம்" என்பது ஆபிரகாமின் "வித்தாகிய" மேசியாவின்[12] வருகை பற்றிய நம்பிக்கையாகும் (ஆதி. 12:3; 22:18; கலா. 3:16, 19ஐக் காணவும்). காலங்கள் கடந்த போது அந்த தொடக்க கால "நம்பிக்கை"யானது விரிவாக்கப்பட்டது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், இஸ்ரவேலின் மகிமையை மேசியா மறுபடியும் கட்டியெழுப்புவார் என்று யூதர்கள் நம்பியிருந்தார்கள் (லூக். 1:67-79; அப். 3:20, 21).*

*மீண்டும் கட்டியெழுப்புதல் என்பதின் நம்பிக்கையுடன் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையும் பிணைக்கப்பட்டிருந்தது (லூக். 7:18-23). தானியேல் 12:2ல், "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்"[13] என்று கூறப்படுகின்றது. லாசரு மரித்த போது, மார்த்தாள் "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் [லாசருவும்] உயிர்த்தெழுந்திருந்திருப்பான் என்று*

*அறிந்திருக்கிறேன்" (யோவா. 11:24ஆ) என்று சராசரி யூதரின் நம்பிக்கையைப் பற்றிப் பேசினாள்.*

*பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம்[14] ஆகியவற்றை நம்பியிருந்த எல்லா யூதர்கள் ஆகியோருக்கு உயிர்த்தெழுதல் என்பது அடிப்படையான நம்பிக்கையாய் இருந்ததால், தேவன் மரித்தோரிலிருந்து ஒருவரை உயிரோடு எழுப்பினார் என்று (அவர்கள் நம்பியதாக உரிமைகோரிய அந்த விஷயத்தை) தாம் பிரசங்கித்ததற்காக சகயூதர்கள் தம்மை நியாயஸ்தலத்திற்கு இழுத்துக் கொண்டு வந்ததென்பது பவுலினால் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. அவர், "அகிரிப்பா ராஜாவே, அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என் மேல் குற்றஞ் சாட்டுகிறார்கள்" (வ. 7ஆ) என்று கூறுகையில் அவரது குரலில் இருந்த அதிர்ச்சியை என்னால் உணர முடிகின்றது. "எல்லா ஜனங்களிலேயும் அதுவும் யூதர்களால்" என்று இச்சொற்றொடரில் F. F. புரூஸ் அவர்கள் பவுலின் வார்த்தைகளின் உணர்வைப் படம் பிடித்துக் காட்டினார்.*

*உணர்ச்சிவசப்பட்டவராய், பவுல், தம் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்களிடத்தில் திரும்பினார்: "தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள்[15] எண்ணுகிறதென்ன?" (வ. 8). பவுல் தமது வார்த்தையாகிய தார்க்குச்சியால் எல்லாத் திசைகளிலும் குத்திய பொழுது, அநேகமாக அங்கிருந்தவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் இருக்கையிலிருந்து எழும்பிக் குதித்திருப்பார்கள்.*

*பவுலின் வார்த்தைகள் அங்கிருந்த எல்லாருக்கும் நடைமுறைப் படுத்தப்பட்டது. புறஜாதியாரில் பெரும்பாலானோர் எல்லாவற்றையும் படைத்திருந்த வல்லமையுள்ள ஒரு தேவன் (அல்லது தேவர்கள்) என்ற கருத்தின் மீது நம்பிக்கையாய் இருந்தார்கள் (17:24, 25); தேவன் உலகத்தைப் படைக்க முடிந்தது என்றால், அவர் மரித்தோரை உயிர்ப்பிக்க முடியும் என்பதை மட்டும் அவர்கள் நம்ப முடியாததென்று ஏன் கருத வேண்டும்? சிறப்பாக, அவர் வார்த்தைகள் அங்கிருந்த (அகிரிப்பா உட்பட) எந்த ஒரு யூதருக்கும் ஏற்புடையதாக இருந்தது. மற்றவர்களைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பியிருந்தால், இயேசுவை அவர் எழுப்பியதை மட்டும் அவர்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும்? வரையறைக்குட்பட்ட உணர்வு*

*களில் நம்புகின்ற, தங்கள் தவறான தர்க்கங்களில் மட்டும் நம்பிக்கை கொள்ளுகின்ற, தங்களை மட்டுமே சார்ந்துள்ள மக்களுக்கு உயிர்த்தெழுதல் என்பது நம்ப முடியாததாகவே இருக்கும்.*

*கூட்டத்திற்கு அறைகூவல் விடுத்த பவுல், அவர்களுடைய நிலையிலேயே தாம் முன்னொரு காலத்தில் இருந்ததாக ஒப்புக் கொண்டார். பரிசேயர் என்ற வகையில் மரித்தோரின் உயிர்த்தெழுதலை அவர் கொள்கையளவில் ஒப்புக் கொண்ட வராயிருந்து, இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டிருப்பதன் சாத்தியக் கூற்றைப் புறக்கணித்திருந்தார்:*

> *முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு[16] விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில்[17] அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெப ஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ்[18] சொல்லக் கட்டாயப் படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்க வெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன் (26:9-11).*

*பவுல் ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை உபத்திரவப் படுத்தியதில் ஏரோதின் குடும்பத்தைக் காட்டிலும் - அதிகமான - வைராக்கியத்துடன் இருந்தார் என்று அறிந்த போது அகிரிப்பா திகைப்படைந்திருக்க வேண்டும். "இந்த துன்புறுத்து பவர் எவ்விதம் இப்படிப்பட்ட மாறுதலுக்குட்பட்டார் என்ற கேள்வியானது அந்த இளைஞரின் மனதில் விருப்புடன் எழத் தொடங்கியது."[19]*

### *"நான் ... ஒரு ஒளியைக் கண்டேன்" (26:12-18)*

*தமது வாழ்வில் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வந்தது எது என்பது பற்றிப் பவுல் அகிரிப்பாவிடம் கூறினார்:*

> *இப்படிச் செய்து வருகையில், நான் பிரதான ஆசாரியர்*

> களிடத்தில் அதிகாரமும் உத்தரவும் பெற்று, தமஸ்குவுக்குப் போகும்போது, மத்தியான வேளையில், ராஜாவே, நான் வழியிலே சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனே கூடப் பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன். நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது: சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப் படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரேயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன் (வ. 12-14).

உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ள பரிசேயராக வளர்க்கப் பட்டது உட்பட பவுலின் வாழ்க்கையில் சகலமும் நடந்திருந்தது, அது அவர் இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கான கர்த்தருடைய சிட்சையாய் இருந்தது (கலா. 1:15அ). பவுல் தனிப்பட்ட விதத்தில் உபத்திரவமும் துன்பமும் தருபவராய் இருந்து கடினமாக எதிர்த்து நின்றிருந்தார். அகிரிப்பாவின் குடும்பத்தார் கூட அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டளவாக[20] "முள்ளிலே உதைத்துக் கொண்டிருந்தார்கள்." அந்த இராஜா நேர்மையானவராய் இருந்திருந்தால், அது "கடினமானது" என்று ஒப்புக் கொண்டிருந்திருக்க வேண்டும்; அவரது தகப்பனார் அடைந்த கொடூரமான மரணம் அவ்விஷயத்தில் ஒரு கருத்தாகும்.

பவுல் தமது எடுத்துரைப்பைத் தொடர்ந்தார்: ஒளியினால் சூழப்பட்ட அவர் நடுங்கிய குரலில், "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்டார். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று பதில் வந்தது (26:15). தெய்வீக தார்க்குச்சியானது அவருடைய இருதயத்தை ஊடுருவும் ஒரு பட்டயமாகவும், அவரது வாழ்க்கையை மாற்றியமைத்த கத்தியாகவும் மாறியது! உயிர்த்தெழுந்த கர்த்தர் அவருக்குப் பின்வருமாறு கட்டளையிட்டார்:

> இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும்[21] சாட்சியாகவும்[22] ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை

> *விடுதலையாக்கி,[23] அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் (வ. 16-18).*

*''இயேசு உங்களுக்குத் தோன்றினார் என்ற உங்கள் வார்த்தையை மட்டுமே நாங்கள் பெற்றுள்ளோம்'' என்று எவராவது மறுத்துரைத்தால், பவுல், ''நான் இயேசுவைக் காணவில்லையென்றால், எனது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு எவ்வகையில் விளக்கம் தருவீர்கள்?'' என்ற முழு நிறைவான பதிலை வைத்திருந்தார்.*

### *"நான் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" (26:19, 20)*

*இப்பொழுது பவுல் தம்முடைய தார்க்குச்சியை அந்த இளம் அரசரின் இருதயத்தை நோக்கி குறி வைத்தார். "ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரமதரிசனத்துக்கு கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" (வ. 19). "நான் வேறு என்ன செய்திருக்க முடியும்?" என்ற கேள்வி அதில் மறைந்திருந்தது. பவுல் வேறு எதுவும் செய்திருக்க முடியாதிருந்தது என்றால், அகிரிப்பாவும் வேறு எதுவும் செய்ய முடிந்திருக்காது!*

*பவுல் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்; அவர் உடனே ஞானஸ்நானம் பெற்றார் (22:16; 9:18). கர்த்தர் கொடுத்த ஊழியத்திற்கும் அவர் கீழ்ப்படிந்தார்:*

> [நான்] *முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும்,[24] பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன் (26:20).*

*நீதியற்ற, ஒழுக்கவீனமான ரோம தேசாதிபதி ஒருவரிடத்தில் பவுல் ''நீதியை''யும் இச்சையடக்கத்தையும் பிரசங்கித்*

திருந்தார் (24:25); இப்பொழுது மனந்திரும்பாத யூத அரசர் ஒருவரிடத்தில் அவர் மனந்திரும்புதல் பற்றிப் பிரசங்கித்தார்.[25] ‘‘யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் ...’’ (26:3) என்ற புகழ்ச் சொல்லைப் பெற்றிருந்தவர் நிச்சயமாகவே, “ஒருவன் தன் ... சகோதரியைச் சேர்த்துக் கொண்டு ... பார்த்தால், அது பாதகம்; அவர்கள் ... அறுப்புண்டு போகக் கடவர்கள் ...” (லேவி. 20:17). பவுல் அவ்விடத்தில், “மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புத லுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று’’ அறிவித்தார் (26:20ஆ); அவ்வாறு செய்வது அபாயமான தாயிருந்த போதிலும் பவுல் சற்றும் கடுமை தணியாது இவ்விதம் கூறினார்!

### *“நான் இந்நாள் வரைக்கும் சாட்சி கூறி வருகிறேன்” (26:21-23)*

அகிரிப்பா, தாம் மனம் மாறினால் கிறிஸ்தவ வாழ்வு என்பது சுலபமாயிருக்காது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது. தொடர்ந்து பவுல்: ‘‘இதினிமித்தம் [ஏமாற்றுத்தனமான குற்றச்சாட்டுகளால் அல்ல, ஆனால் பிரமாணத்திலிருந்து விலகியிருந்த புறஜாதியாருக்கு நான் இரட்சிப்பைப் பிரசங்கித்ததினாலேயே] யூதர்கள் தேவாலயத் திலே என்னைப் பிடித்துக் கொலை செய்யப் பிரயத்தனம் பண்ணினார்கள்” (வ. 21). அது போலவே, அந்த அரசர் தமது வாழ்வை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தால், அவருடைய (அரசருடைய) நண்பர்கள் அவருக்கெதிராகத் திரும்பி யிருக்கலாம்.

ஆனால் இப்படிப்பட்ட ஒப்புக் கொடுத்தலை மேற் கொள்ளும்போது கர்த்தர் தம்முடன் நிற்பார் என்பதையும் அகிரிப்பா அறிய வேண்டியது தேவையாய் இருந்தது. இவ்விதமாகப் பவுல் விரைவாக, “ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று நான் இந்நாள் வரைக்கும் ... சாட்சி கூறி வருகிறேன்” (வ. 22) என்று கூடக்கூறினார். இயேசு அவரை “எழுந்து நில்” (வ. 16) என்று கூறியிருந்தார், அவர் தேவனுடைய உதவியி னால் தொடர்ந்து நிற்க வேண்டியிருந்தது. பவுலுக்குக் கிடைத்த பலம் அரசருக்கும் கிடைக்கக் கூடியதாகவே இருந்தது.

*கர்த்தரைச் சார்ந்திருந்ததினால் பவுல் கர்த்தரின் கட்டளையை நிறைவேற்ற முடிந்திருந்தது:*

> *... நான் இந்நாள் வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சி கூறி வருகிறேன். தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபட வேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில்[26] அவர் முதல்வராகி, சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான் (வ. 22ஆ, 23).*

*மேசியா மரித்து உயிர்த்தெழுப்பப்படுவார் என்று நிரூபிக்க உபாகமம் 18, ஏசாயா 53 மற்றும் மற்ற வேதவசனப் பகுதிகள் ஆகியவற்றைப் பவுல் மேற்கோள் காட்டியதை நான் கேட்க முடிகின்றது மற்றும் அவர் அதற்குப் பின் நற்செய்தியானது யூதர், புறஜாதியார் ஆகியோருக்குப் பிரசங்கிக்கப்படும் என்று அறிவித்துமிருப்பார். மேலும் பவுல், "இந்த இயேசுவே கிறிஸ்துவாய் இருக்கிறார் என்று நான் உமக்கு அறிவிக்கிறேன்" (அப். 17:3ஆ) என்றும் கூறுவதைக் கேட்க முடிகின்றது.*

*மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் எழுதியிருந்ததை அகிரிப்பா விசுவாசித்தாரா என்று கேட்பதே தர்க்கரீதியான அடுத்த செயற்படியாய் இருந்திருக்கும் (26:27). பவுல் அதைச் செய்ய முடிவதற்கு முன்னால், அவர் இடை நிறுத்தப்பட்டார்.*

## *பின்தொடர்ச்சி (26:24-32)*

*இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் செயல்பாடுகள் யாவற்றையும் அகிரிப்பாவினிடத்தில் திருப்பி விட்டபடியினால், பெஸ்து காட்சிக்குப் புறம்பே இருந்தார். இருப்பினும், பவுலின் பிரசங்கம் தொடர்ந்த போது, அவர் (பெஸ்து) கலவரமடையத் தொடங்கினார் என்பது உறுதியாகும். மரியாதைக்குரிய விருந்தினரைப் பவுல் மறுபடி மறுபடி தார்க்குச்சியால் குத்துவதைப் பார்த்த போது,* RSPCA*வைச் செயல்படுத்துவது* (the Roman Society for the Prevention of Cruelty to Agrippa) *சரியானது என்று முடிவு செய்தார். பவுல் தற்காப்பு*

*வாதமாக இதைக் கூறிக் கொண்டிருக்கையில், "பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி[27] உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" என்று கூறினார் (வ. 24).*

*பெஸ்துவின் படபடப்பான வார்த்தைகளை நாம் கவனியாதிருந்தாலும் கூட, அவைகள் நம்மை திகைப்படையச் செய்வதில்லை. காலங்களினூடே நிலவும் மாபெரும் சத்தியத்தை, "... மரித்துப் போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்ததை" (25:19) என்று சொல்லி ஒன்றுமில்லாததாகத் தள்ளி விடுமளவு திட்டமற்றவராய் இருந்த அம்மனிதர் சத்தியத்தின் மாபெரும் கருத்தாளரைப் பயித்தியக்காரன் என்று ஒதுக்கி வைப்பதில் வியப்பெதுவும் இல்லை.*

*பெஸ்துதான் பயித்தியக்காரன் போலச் செயல்பட்டார். பவுலோ அமைதியாக: "கனம் பொருந்திய பெஸ்துவே,[28] நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்" (26:25) என்று பதில் அளித்தார். இயேசுவை ஏற்றுக்கொள்ளு முன்பு பவுல் பயித்தியக்கார தன்மையில் இருந்தார் (வ. 11[29]) ஆனால் இப்பொழுதோ அவர் "புத்தி தெளிந்திருந்தார்" (மாற். 5:15).*

*அப்போஸ்தலர் அகிரிப்பாவிடம் திரும்பினார்: "இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல" (வ. 26). கிறிஸ்தவம் என்பது இரகசியமான ஒழுங்கு முறையாயிருந்ததில்லை; சுவிசேஷமானது வீட்டின் கூரைப் பகுதிகளின் உச்சியிலிருந்து உரத்துக் கூறப்பட்டிருந்தது (மத். 10:27). அகிரிப்பாவின் பிறப்பும், இயேசுவின் சொந்த ஊழியத் தொடக்கமும் ஒரே வேளையில் நடைபெற்றிருந்தன; அவர் குழந்தைக்குரிய தமது உணவுடன், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் வரலாறுகளையும் சேர்த்து ஊட்டப்பட்டிருந்திருப்பார். பவுல் கூறிய எல்லாவற்றையும் அவரால் மதிப்பிட முடிந்திருந்திருக்கும். இருப்பினும், அப்படிச் செய்வதானது அவர் தம்மை உபசரித்தவருக்கெதிராக கைதியுடன் நிலைப்பாடுடையவராய் இருக்கும் உறுதியற்ற நிலையில் வைப்பதாயிருக்கும். இவ்விதமாக அவர் அமைதியாய் இருந்தார்.*

அகிரிப்பா, தமது மவுனம் பவுலைத் தடுக்கும் என்று நினைத்திருந்தால், அது தவறான நினைவாகும். அந்த அப்போஸ்தலர் அவரை (அகிரிப்பாவை) வலியுறுத்தினார்: ''அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான்'' (வ. 27). அந்த இளம் ஆட்சியாளர், தாம் தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கவில்லையென்று கூறியிருந்தால், யூத மக்களின் மரியாதையையும் ஆதரவையும் அவர் இழந்திருப்பார். தீர்க்கதரிசிகளைத் தாம் விசுவாசிப்பதாக அவர் கூறியிருந்தால் நிச்சயமாக, "ஆகையால் தீர்க்கதரிசிகளால் பேசப்பட்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொள்ள மனதாயிருக்கிறீர் அல்லவா?" என்பதே பவுலின் அடுத்த கேள்வியாய் இருக்கும். அகிரிப்பா ஏதாவது சொல்ல வேண்டியதாயிருந்தது; அந்த அறையில் இருந்த யாவரும் அவரது பதிலுக்காகக் காத்திருந்தார்கள். கடைசியில் அவர் பேசினார்: ''நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்'' (வ. 28).

அகிரிப்பா இவ்வார்த்தைகளை எப்படிக் கூறினார் என்று அறிய நான் விரும்புகின்றேன்: அவரது குரலின் தொனி, அவரது முகபாவம் மற்றும் அவரின் உடலின் நிலை ஆகியவை அப்போது எப்படியிருந்தன என்று அறிய விரும்புகின்றேன். மூல வசனமானது எத்தனை வழிமுறைகளில் வேண்டுமானாலும் விளக்கப்படுத்தப்பட முடியும், இது மொழிபெயர்ப்புகளில் உள்ள மாற்றத்திலிருந்து விளங்குகின்றது. அகிரிப்பா (sincere) உண்மையுள்ளவராயிருந்தார் என்று சிலர் நம்புகின்றார்கள் (KJV போன்றவை); மற்றவர்களோ, அகிரிப்பா பவுலின் நிலை பற்றிப் (sympathetic) பரிதாபம் கொண்டிருந்தாலும், அவர் முற்றிலுமாகப் பவுல் கூறியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நினைக்கின்றார்கள் (NIV); இன்னும் மற்றவர்கள், அகிரிப்பா (sarcastic) கேலியாகக் கூறுபவராய் இருந்தது உறுதி என்று நினைக்கின்றார்கள் (RSV).[30] இதற்கு முன் நடந்த எல்லாவற்றிலும் பவுலிடத்தில் அகிரிப்பா இரக்கத்துடன் இருந்ததால், பவுலின் பேச்சுக்குப் பிறகும் கூட (25:24; 26:1, 32), கேலியாகக் கூறுதல் என்ற தேர்வை நாம் விட்டுவிட முடியும். அந்த இராஜா, மனந்திரும்புதலுக்கு எவ்வளவு நெருங்கியிருந்தார் என்பதை நாம் ஒருபொழுதும் அறியப் போவதில்லை.

*அகிரிப்பா எதை அர்த்தப்படுத்தியிருந்தாலும், அவருடைய வார்த்தைகளைப் பவுல் முகமதிப்பாக ஏற்றுக் கொண்டு, நடபடிகளில் காணப்படுகின்ற மிக வல்லமையான மற்றும் சொல்லாற்றல் மிக்க வேண்டுகோளுக்கு அவற்றைப் பயன் படுத்தினார்:*

> *அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும் [பெர்னீக்கேயாள், பெஸ்து, விருந் தினர், சேவகர்களையும் சேர்த்து, பவுல் தம் கைகளை அவர்களை நோக்கி நீட்டி], கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர [விலங்கிடப்பட்ட மணிக்கட்டுகளை இப்பொழுது பவுல் தூக்கிக் காட்டு வதைக் காணுங்கள்][31] முழுவதும் என்னைப் போலாகும் படி[32] தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் (வ. 26:29).*

*அகிரிப்பா தாம் ஏற்கனவே அதிகமாய்க் கூறியிருந்ததாக எண்ணினார் என்பது தெளிவு. திடீரென்று அவரும் "தேசாதிபதியும், பெர்னீக்கேயாளும் அவர்களுடனே கூட உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து" (வ. 30). புகழ் மிக்க தனி நபர்களுடன் அவ்வப்பொழுது நான் கலந்து ஆலோசித்திருக் கின்றேன். அவர்கள் எழுந்து நிற்கும் போது, பேட்டி முடிந்தது என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்!*

*பெஸ்துவும் அவரது விருந்தாளிகளும் பவுலின் வேண்டு கோள் விடுக்கும் விழிகளில் இருந்து விடுதலையானவுடனேயே அவரைப் பற்றி, "... தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள்" (வ. 31). "இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை'' என்பதே அவர்களின் ஏகோபித்த தீர்ப்பாக இருந்தது (வ. 31ஆ). அது பவுலுக்கு ஒரு வெற்றியாகவே இருந்தது, ஆனால் அது அவர் விரும்பியபடியான வெற்றியாக இருக்கவில்லை. அவர் இயேசுவை மெய்ப்பித்துக் காட்ட விரும்பியிருந்தார்; அதற்கு மாறாக அவர் தம்மையே மெய்ப்பித்துக் காட்டியிருந்தார். அவர் அவர்களுடைய ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய விரும்பினார்; அதற்கு மாறாக அவர் அவர்களின் ஆதரவை ஆதாயம் செய்து கொண்டிருந்தார்.*

*இருப்பினும் பெஸ்து இன்னமும் ரோமாபுரிக்குத் தமது*

*கடிதத்தை எழுதத் தயாராகவில்லை; இன்னமும் அவருக்குப் பவுலின் மீது சாட்டப்படத் தக்க குற்றச்சாட்டுகள் எதுவும் கிடைக்கவில்லை! தேசாதிபதி எழுதுவது எதுவாயிருப்பினும், அவ்வழக்கைத் தாம் தவறாகக் கையாண்டதற்குப் பெஸ்து தம்மைத் தவிர மற்ற ஒவ்வொருவரையும் குற்றம் சுமத்தினார்! அந்த அறிக்கையானது பவுலுக்குச் சாதகமாய் இருந்தது என்பதும் உறுதியாகும், ஏனென்றால் அவர் ரோமாபுரி செல்லும் பயணத்தின் போதும், ரோமாபுரியிலும் மிகவும் நன்றாக நடத்தப்பட்டார் (28:16, 30, 31).*

*அதிகாரம் 26ல் - ஏறக்குறைய முற்றிலும் நம்பவே முடியாத - ஒரு நிறைவுக் குறிப்பு உள்ளது. எந்த ஒரு ஏரோதும் இயேசுவைப் பின்பற்றுபவர்களைப் பாராட்டியதே இல்லை. பிரதான ஆசாரியருடன் கூட்டணி ஏற்படுத்தியிருந்த யூதத் தலைவர் ஒருவர், பவுலைப் பற்றி நல்வார்த்தையொன்றைப் பிறப்பித்து பேசியிருக்க முடியாதிருந்தது; இருப்பினும் இரண்டாம் ஏரோது அகிரிப்பா, பவுலைக் கொல்லும்படியான எண்ணத்தால் ஆட்டுவிக்கப்பட்டிருந்த பிரதான ஆசாரியரைத் தேர்வு செய்திருந்தும் கூட, மேற்சொன்ன இரு செயல்களையும் செய்திருந்தார்! மற்றும் அகிரிப்பா பெஸ்துவிடம், "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும்"[33] (வ. 32) என்று கூறினார். ஒரு மனிதர் மற்றும் அவரது செய்தி ஆகியவற்றினால் "ஏரோதுகளில் கடைசியானவர்" மனதில் ஆழ்ந்த பதிவுகளைப் பெற்றார்! என்ன நடந்திருக்கும் என்று ஆச்சரியப்படும்படி நாம் விடப்படுகிறோம். நாம் ஒருபோதும் அறிய மாட்டோம்.*

## *முடிவுரை*

*ஏமாற்றமடைந்த பவுல் தமது சிறையறைக்கு நடத்திச் செல்லப்படுகையில், "அது நேரத்தை வீணாக்குதலாயிற்று! பவுல் மிக நேர்த்தியாகப் பிரசங்கித்தும் ஒருவர்கூட மனம் மாறவில்லையே!" என்று கூறும்படியாக நாம் சோதிக்கப் படலாம். ஆழ்ந்து சிந்திக்கையிலோ, அது நேரத்தை வீணாக் குதல் அல்ல என்று நாம் உணருகின்றோம்: அகிரிப்பாவுக்கும் அங்கிருந்த மற்றவர்களுக்கும் வெளிச்சம் காண்பிக்கப் பட்டிருந்தது. அவர்கள் கண்களை மூடிக் கொண்டிருந்தால்,*

*அது பவுலின் தவறு அல்ல. அகிரிப்பாவுக்கும் மற்றவர்களுக்கும் விடுதலையின் வழி காண்பிக்கப்பட்டிருந்தது; அவர்கள் பாவத்தின் அடிமைத்தனத்தில் நிலைத்திருந்தால், பவுலை அதற்குக் குற்றம் சாட்ட முடியாது. பவுல் இயேசுவைப்பற்றி அவர்களுக்குப் பிரசங்கித்திருந்தார்; இப்பொழுது அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லாதிருந்தது.*

*இவ்வசனங்களை நீங்கள் படித்திருக்கும் இவ்வேளையில், உங்களை நீங்கள் அகிரிப்பாவின் இடத்தில் வைத்துக் காண்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். தேவனுடைய முள்ளில் இருந்து அவர் தம் வார்த்தையின் மூலம் உங்கள் வாழ்வின் இலக்குகளைத் திருப்ப விரும்பும்படியாகக் குத்துகளை உங்களால் உணர்ந்திருக்க முடியும் என்று நம்புகின்றேன். பவுலைப் போன்றே, ''நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், ... என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன்'' (அப். 26:29) என்று நீங்களும் - ஒரு கிறிஸ்தவனாக - இயேசுவைப் பின்பற்று கிறவராக வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். முடிவாக, நீங்கள் கர்த்தருக்குப் பதில்செயல் செய்வீர்களா இல்லையா என்பதை நீங்களேதான் தீர்மானிக்க வேண்டும். பவுலைப் போல நீங்களும் கூட "அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" (வ. 19ஆ) என்றாகலாம் அல்லது எழுந்து நின்று புறம்பே நடந்து போன அகிரிப்பா அரசரைப் போன்று ஆகலாம். உங்கள் நிலை எதுவாய் இருக்கும்?*

## காட்சி - உதவிக்குறிப்புகள்


*ஆறு அல்லது எட்டு அடிகள் நீளமுடைய ஒரு குச்சியை எடுத்து அதன் நுனியில் வெள்ளை வண்ணம் பூசி ''முள்'' என்பதை விளக்கப்படுத்தப் பயன்படுத்தலாம். அதை இடுப்பு உயரத்திற்குப் பூமியில் கிடைமட்டமாய் நிறுத்திக் காட்டுங்கள். இப்பாடத்தின்போது அதை உங்கள் அருகிலேயே வைத்துக் கொள்ளுங்கள், பவுல் அகிரிப்பாவைச் சிட்சித்துப் பேசிய நேரங்களைப் பற்றிப் பேசும் போது, அந்தச் சிந்தனையை உங்கள் அருகில் உள்ள கோலை (குச்சியை) குத்துவது போல்*

காட்டுவதன் மூலம் குறியிடுங்கள்.

"கொஞ்சங் குறைய" என்ற கருத்தை வலியுறுத்துவதென்று நீங்கள் முடிவு செய்தால், (தொடர்ந்து வரும் "பிரசங்கக் குறிப்பு கள்'' என்பதைக் காணவும்), கரும்பலகையில் சில விஷயங்களை எழுதுவது நலம்: முதலாவது, சரியில்லாத சமன்பாடு ஒன்றை எழுதுங்கள். அடுத்ததாக, பழக்கப்பட்ட பெயர் ஒன்றை தவறான ஒரு எழுத்துடன் எழுதுங்கள். கடைசியாக, ஒரு பள்ளத்தாக்கைக் கடக்க முயற்சி செய்யும் (ஆனால் அதைச் செய்து முடிக்காத) படம் ஒன்றை வரையுங்கள். எடுத்துக்காட்டு இதோ:

*14 +*
*<u>17</u>*
*32*

சலாயராஜ்



''இந்த விளக்கங்களின் பொதுப் பண்பு என்ன'' என்று கேளுங்கள். எல்லாமே "கொஞ்சங்குறைய" இருக்கின்றன. கூட்டல் கணக்கு கொஞ்சங்குறைய சரியானதாய் இருக்கின் றது; பெயரானது கொஞ்சங்குறைய சரியானதாய் இருக்கின் றது; குதிக்கும் மனிதர் கொஞ்சங்குறையச் தாண்டி விட்டார். ஒவ்வொன்றும் சரியானதற்கு மிக நெருக்கமாய் இருந்தாலும், சரியானது அல்ல. கூட்டல் கணக்கு 97 சதவிகிதம் சரியானதே, ஆனால் 100 சதவிகிதம் அது தவறானதாகும். எழுதப்பட்டுள்ள பெயரானது 90 சதவிகிதம் சரியானதே ஆனால் 100 சதவிகிதம் அது தவறானதாகும். குதிக்கும் மனிதர் தாம் கடக்க வேண்டிய வழியில் எட்டில் ஏழு பங்கைக் கூட கடந்திருக்கவில்லை; அவர் அதைச் செய்து முடிக்கவில்லை! "கொஞ்சங்குறைய" என்பது வேலையைச் செய்து முடிப்பது அல்ல!

## பிரசங்கக் குறிப்புகள்

அகிரிப்பாவின் மனமாற்றமில்லாமை என்ற வரலாறானது

‘‘அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1’’ இதழில் மனமாற்றங்கள் பற்றிய தொடர் பிரசங்கங்களுக்கான ஆலோசனையின் கடைசிப் பாகம் ஆகும். இந்தத் தொடரை நீங்கள் பிரசங்கித்தால், இப்பாடத்தை நீங்கள் பயன்படுத்த முடியும், அல்லது பின்வரும் கருத்துக்களில் ஒன்றை நீங்கள் தெரிவு செய்து கொள்ளலாம்.

இந்த மனமாற்றமில்லாமைக்கான சிறந்த அணுகுமுறை யானது “கொஞ்சங்குறைய சம்மதிக்கப் பண்ணுதல்” அல்லது “கொஞ்சங்குறைய - ஆனால் இழந்துபோகப்படுதல்” என்ற பிரசங்கமாய் இருக்கின்றது (26:28 வசனமானது KJV அல்லது NKJVயில் உள்ளபடியான சொற்றொடரைப் பயன்படுத்து கின்றோம்): ‘‘கொஞ்சங்குறைய’’ என்பதன் கவலைக்குரிய நிலை பற்றிய விளக்கங்களை நீங்கள் சார்லஸ் ஸ்வின்டால் அவர்களின் பாட வழிகாட்டியான *The Strength of an Exacting Passion* என்ற நூலிலும், க்ளோவிஸ் சேப்பல் அவர்களின் *Values That Last* என்ற நூலிலும் காண முடியும். “Almost Persuaded” என்ற தலைப்பில் பவுல் ரோஜர்ஸ் அவர்களின் பிரசங்கம் ஒன்று மே 1985ன் *The Preacher’s Periodical* (இப்பொழுது *Truth for Today*) ஆங்கில இதழில் வெளியானது. நீங்கள் பின்வரும் சிந்தனை யையும் பயன்படுத்தலாம்: ‘‘இரண்டு வகையான மக்கள் இருக்கின்றார்கள்: ‘கொஞ்சங்குறைய’ கிறிஸ்தவர்கள் மற்றும் ‘முற்றிலுமான’ கிறிஸ்தவர்கள்.’’ (இவ்வசனப் பகுதியுடன் நீங்கள் “கொஞ்சங் குறைய” என்ற விஷயத்தைப் பயன்படுத்தி யிருந்தால், இது “இராஜ்யத்திற்கு வெகுதொலைவில் இல்லை” [மாற். 12:34] என்ற ஒரு பிரசங்கத்தில் பயன்படுத்தப்படலாம்.)

(மேல் குறிப்பிட்ட பாட வழிகாட்டியில் சார்லஸ் ஸ்வின்டால் அவர்கள் இவ்வரலாற்றிலிருந்து “கிறிஸ்தவரல்லாத ஒரு நண்பரிடத்தில் இயேசுவைப் பற்றிப் பேசுவது எப்படி?” என்பதற்கான ஆலோசனைத் தொடர் ஒன்றையும் எடுத்துக் கூறியிருக்கின்றார்.)

‘‘பணக்கார இளம் அதிகாரி’’ என்ற தலைப்பில் அகிரிப்பாவை, மத்தேயு 19, மாற்கு 10 மற்றும் லூக்கா 18 ஆகிய அதிகாரங்களில் வரும் பணக்கார இளம் அதிகாரியுடன் ஒப்பிட்டுக் காட்டி பிரசங்கித்தல் என்பது அகிரிப்பாவைப் பற்றிப் படிக்கும் ஒரு வழியாகும். சில வழிகளில் இவர்கள் ஒன்று போலவும், சில வழிகளில் இவர்கள் மாறுபட்டவர்

*களாகவும் இருக்கின்றார்கள், ஆனால் கடைசியில் இவ்விருவருமே தங்கள் வாழ்வுகளில் மாபெரும் வாய்ப்பைத் தவற விட்டு விட்டார்கள்.*

*இவ்வரலாற்றின் மையப் பகுதியாக விளங்குவது பவுலின் மனமாற்றம் பற்றிய மூன்றாவது எடுத்துரைப்பு ஆகும். இம்மனமாற்றம் பற்றி முந்திய இதழ்களில் நாம் விபரமாகக் கற்றுக் கொண்டதால், அப். 26 பற்றிய நமது பாடத்தில் இந்த விபரத்தைப் பவுல் அகிரிப்பாவை மனமாற்றுவதற்கு எப்படிப் பயன்படுத்திக் கொண்டார் என்பதையே நான் வலியுறுத்தினேன். நீங்கள் மனமாற்றத்தையே வலியுறுத்த விரும்பலாம் (இந்த இதழில் அப். 22க்கான பிரசங்கக் குறிப்புகளைக் காணவும்). அப். 26ன் விபரங்கள் தொடர்பாக, மாற்கு கிளேயர்டே அவர்கள் சவுல்/பவுல் தமது மனமாற்றத்திற்கு முன்னும் பின்னும் வெளிப்படுத்திய வைராக்கியத்தை வலியுறுத்தினார். அவர் பவுலின் “தவறாக வழி நடத்தப்பட்ட வைராக்கியம்” (அவர் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திய வேளையில்), பவுலின் “இலக்கு மாற்றப்பட்ட வைராக்கியம்” (கர்த்தரின் தரிசனத்தினால் ஏற்பட்ட விளைவு), மற்றும் பவுலின் “ஊழிய வைராக்கியம்” (அகிரிப்பாவை மனமாற்ற முயற்சி செய்கையில்) ஆகியவை பற்றிப் பேசினார்.*

*அப். 26ஐ ரிக் ஆட்ச்லி பிரசங்கிக்கையில், வசனத்திற்குப் பின் வசனம் என்று எடுத்துக் கொண்டு படிக்கவில்லை, ஆனால் கிறிஸ்துவைப் பற்றிப் பவுல் வலியுறுத்தியதை அவர் தம் பிரசங்கத்தில் வலியுறுத்தினார்: கிறிஸ்துவை உண்மை இயல்பு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல், கிறிஸ்துவை அடைதல் (புறஜாதியாருக்குக் கூட), கிறிஸ்துவுக்குப் பதில் செயல்.* (“Avoiding the Obvious” *என்ற தலைப்புள்ள பிரசங்கத்தில் இருந்து).*

*அகிரிப்பாவை முக்கியப்படுத்தி நான் எடுத்துரைத்தேன், ஆனால் பெஸ்துவும் கூட குறிப்பிடத் தக்கவரேயாவார். “அறியாமலிருந்த - ஆனால் அது பற்றிப் பெருமையாய் இருந்த - ஒரு மனிதர்” என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப் பட முடியும். இதற்கான வேதபாடப் பகுதி 26:24 ஆகும், அதில் பெஸ்து, பவுலின் “அதிகக் கல்வியை”ப் பற்றி நம்பிக்கையற்றுப் பேசினார். (1) யூதத்துவத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை பெஸ்து அறியாதிருந்தார் (25:19அ).*

*(இன்றைய நாட்களில் சிலர் பழைய மற்றும் புதிய உடன்படிக் கைகளை வேறுபடுத்திக் காண்பதில்லை.) (2) அவர் கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலைப் பற்றி அறியாதிருந்தார் (25:19ஆ). (இன்றைய நாட்களில் பலர் இயேசுவின் சரீர உயிர்த்தெழு தலின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்வதில்லை.) (3) அவர் தேவனுடைய ஊழியரைப் பற்றி அறியாமல் இருந்தார் (25:24 - "இந்த மனுஷன்"): அவர் யார், அவர் எதற்காக நிலை நின்றார், அவர் என்ன போதித்தார். (பலர் வேதாகமம் பற்றியும் அதன் போதனைகள் பற்றியும் அறியாமல் இருக்கின்றார்கள்.) (4) அவர் ஆவிக்குரிய மதிப்பீடுகள் பற்றி அறியாமல் இருந்தார் (26:24). (பொருளாதாயக் கொள்கையுடைய நமது உலகத்தைப் பொறுத்தமட்டில் இது உண்மையாகும்.) (5) அவர் தமது சொந்தப் பொறுப்புகள் பற்றி அறியாமல் இருந்தார் (25:14, 24; 26:32). (நம்மில் பலர் நமது பாவங்களுக்கான குற்றச்சாட்டை மற்றவர் மீது சுமத்துகின்றோம்.) இத்துடன் நீங்கள் பின்வரும் கருத்தையும் சேர்க்க முடியும்: (6) அவர் பதில்செயல் புரியத் தவறுவதன் விளைவுகள் பற்றி அறியாமல் இருந்தார், முதலியன. (இந்தப் பாடமானது, "குழப்பமடைந்திருந்த மனிதர்" என்று அழைக்கப்பட முடியும் (25:20): பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையில் இருந்த மாறுபாடு பற்றிய குழப்பம், முதலியன.)*

---

*குறிப்புகள்*

[1]Henry E. Dosker, "Herod," in *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 3:1383. [2]*பழங்காலக் கல்வெட்டுக்கள் பலவற்றில் பெர்னீக்கேயாள் "அரசி" என்ற பட்டப் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளாள்.* [3]*பின்னாளில் யூதேயாவில் நடந்த கலகத்தை அமர்த்துவதற்காகத் தீத்து வந்த பொழுது, இவள் அவருடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தாள், ரோமக் குடிமக்களின் கூக்குரல் மட்டும் எழும்பாதிருந்தால் இவள் அவரையும் திருமணம் செய்து கொண்டிருப்பாள்.* [4]*சிக்கலான சூழ்நிலைக்காக மற்றவர்கள்மேல் குற்றம் சாட்டுவதில் பெஸ்து எப்பொழுதுமே எச்சரிக்கையாய் இருந்தார்: பேலிக்ஸ் மீதும் (25:14), யூதர்கள் மீதும் (25:24), பவுல் மீதும் (26:32), தம்மைத் தவிர மற்ற ஒவ்வொருவர் மீதும் குற்றம் சாட்டினார்.* [5]*உண்மையில் அவர் தீர்மானம் செய்வதற்கு ஒன்றும் இல்லாதிருந்தது - பவுல் இராயனுக்கு அபயமிட்ட செயலானது விஷயத்தை அவரது (பெஸ்துவின்) கையில் இருந்து எடுத்துப் போட்டு விட்டது - ஆனால் அவர் தீர்மானம் செய்பவராகத் தோற்றமளிக்க விரும்பினார்.* [6]*பவுல் ஒன்றுமறியாதவர் என்று பெஸ்து வெளிப்படையாக ஒப்புக் கொண்ட செயல்*

*மிகவும் தாமதமாக வந்தபடியால் பவுலுக்கு அது உதவ முடியாதிருந்தது, ஆனால் அப்பகுதியில் இருந்த சபை உறுப்பினர்களுக்கு அது பயனுள்ளதாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. [7]பவுல் தமது பிரசங்கங்களைத் தொடங்கும் போது பெரும்பாலும் கைகளை நீட்டுவது வழக்கம். ஆயினும் இவ்விடத்தில் அவர் தேசாதிபதியையும் அரசரையும் வணங்குவதற்காக இப்படிச் செய்திருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள். [8]யூதர்களின் வட்டாரங்களில் இயேசுவைப் பற்றிய தர்க்கங்களைப் பவுல் அநேகமாய் இவ்விடத்தில் சிந்தையில் கொண்டிருக்கக் கூடும். [9]தெர்த்துல்லுவைப் போல், பவுல் தாம் சுருக்கமாய்ப் பேசப் போவதாகக் கோரவில்லை (24:4ஐக் காணவும்). அதிகாரம் 26ஐ ஐந்து நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் வாசித்து முடித்து விடலாம் - லூக்கா மறுபடியும் தாம் ஏவுதல் பெற்ற பிரசங்கங்களில் சுருக்கத்தைக் கொடுத்ததாக நிரூபித்துள்ளார். [10]அவர் பெஸ்துவை இழந்து போகப்பட்ட ஒரு நபராகக் கருதியிருப்பார் என்பது தெளிவு (மத். 7:6). பவுல் தமது குறிப்புகளில் கேட்பவர்கள் யாவரையும் இருமுறைகள் உள்ளடக்கினார் (26:8, 29), ஆனால் அவர் அகிரிப்பாவின் மீதுதான் கவனம் செலுத்தினார்.*

*[11]இது வார்ரென் W. வயர்ஸ்ப் அவர்களின் ஐந்து கருத்துக்களின் தழுவல் ஆகும். [12]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் உள்ள சொற்பொருள் அகராதியில் "Messiah" "மேசியா" மற்றும் "Christ" "கிறிஸ்து" என்ற வார்த்தையின் கீழ் காணவும். [13]யோபு 19:25-27; சங். 16:10; ஏசா. 26:19; ஓசி. 6:2 ஆகியவற்றையும் காணவும். இது போன்ற வசனப்பகுதிகளுடன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டவர்களின் எடுத்துக்காட்டுகளும் (1 இரா. 17:23; 2 இரா. 4:35; 13:21) சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். [14]மரித்தோர் உயிர்த்தெழுதலை நம்பாத சதுசேயர்கள் நியாயப் பிரமாணப் புத்தகங்கள் ஐந்தையும் ஏற்றுக் கொண்டார்கள், ஆனால் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களை ஏற்றுக் கொள்ளாது இருந்தார்கள். [15]கிரேக்கத்தில் இவ்விடத்தில் "நீர்" (KJVயில் காணவும்) என்றே உள்ளது, ஆனால் அச்சிறப்புப் பெயர்ச்சொல் பன்மைச் சொல்லாகும். இது அந்த வேளையில் பவுல், அகிரிப்பாவிடம் மட்டும் குறிப்பிடாமல் முழுக் கூட்டத்தாரிடத்திலும் பேசினார் என்று சுட்டிக் காட்டுகின்றது. NASBயில் இந்த அர்த்தத்தைத் தருவதற்காக "மக்களாகிய" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டு முயற்சிக்கப் பட்டுள்ளது. [16]"இயேசுவின் நாமம்" என்பது அவரைப் பற்றியும் அவரது போதனை பற்றியும் உள்ள யாவற்றையும் குறிப்பிட்டது. "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் "அவருடைய நாமத்தினாலே" என்ற பிரசங்கத்தின் தொடக்கத்தில் காணவும். [17]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2" இதழில் உள்ள சொற்பொருள் அகராதியில் "Saint" "பரிசுத்தவான்" என்ற வார்த்தையின் கீழ் காணவும். இவ்விடத்தில் சந்தர்ப்பப் பொருளில் பவுல் இவ்வார்த்தையைப் பயன் படுத்திய விதமானது, அவர்கள் சிறை வைக்கப்பட்டதற்கு அவர்கள் மீது சாட்டப் பட்டிருந்த குற்றம் ஒன்றும் அவர்களிடத்தில் இல்லாதிருந்தது என்று இப்போது பவுல் உணர்ந்திருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. [18]இவ்விடத்தில் பவுலின் வார்த்தைகள் இயேசுவைத் தெய்வீகமானவர் என்று கிறிஸ்தவர்கள் அறிக்கை யிட்டது யூதர்களுக்குத் தேவதூஷணமாய் இருந்ததை அர்த்தப்படுத்தும் சாத்தியம் உண்டு. ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 2" இதழில் சொற்பொருள் அகராதியில் "Blasphemy" "தேவதூஷணம்" என்ற வார்த்தையின் கீழ் காணவும்.) இருப்பினும், அவர்கள் இயேசுவை மறுதலிக்கும்படியான தேவ தூஷணம் (கிறிஸ்தவர்களுக்கு இதுவே தேவதூஷணம் ஆகும்) கூறும்படி பலவந்தப்படுத்தினார் என்பதே மிகவும் ஏற்புடைய கருத்தாய் இருக்கிறது என்பதே உண்மையாகும். இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வினையெச்சச் சொல்லானது NASBயில், "I*

*tried* to force them ...” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாகப் பவுல் தமது முயற்சிகளில் குறைந்த வெற்றியாளராக இருந்ததை ஒப்புக் கொண்டார் - இதுவே அவரை அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மீது வெறுப் புணர்வு கொண்டவராய் ஆக்கியிருந்தது. [19]McGarvey, கூறியிருக்கிறார். [20]இயேசுவுடனும் அவரது பின்பற்றாளர்களுடனும் ஏரோதின் குடும்பத்தாருக்குப் பல ஆண்டளவாக நிலவி வந்த தொடர்பானது - அவர்களுக்கு மட்டும் நேர்மையான இருதயம் இருந்திருந்தால் (லூக். 8:15) - கர்த்தரை அறிந்து அவரைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு தனிச்சிறந்த வாய்ப்பைக் கொடுத்திருந்தது.

[21]“ஊழியக்காரன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது வழக்கமான (*diakonos*) கிரேக்க வார்த்தையாக இவ்விடத்தில் வரவில்லை, மாறாக “under-rower” என்று அர்த்தம் தரும் ஒரு வார்த்தை இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. “Under-rower” என்பவர் குற்றவாளிகளைக் கொண்டு வலிந்து செல்லப்படும் கப்பலில் உள்ள ஒரு கடை நிலைப் பணியாளரைக் குறிக்கின்றது. [22]பவுலை ஒரு அப்போஸ்தலராகத் தகுதிப் படுத்துவதற்காகவே இயேசு அவருக்குத் தரிசனமானார். “அப்போஸ் தலருடைய நடபடிகள், பாகம் 2” இதழில் காணவும். [23]“விடுதலையாக்கி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை “மீட்டெடுத்து” என்றும் மொழி பெயர்க்கப்பட முடியும் (NIVயில் காணவும்). பவுலின் ஊழியம் முழுவதிலும், கர்த்தர் தொடர்ந்து அவரை “மீட்கும் பணி” தொடர் ஒன்றில் ஈடுபட்டிருந்தார். [24]பவுல் தாம் முதலாவதாக எருசலேம் சென்றபொழுது “யூதேயாவின் சகல பகுதிகளிலும்” பிரசங்கித்திருக்கவில்லை (கலா. 1:18, 22-24). இருப்பினும் அவர் எருசலேமுக்குச் சென்ற பிந்திய பயணங்களில் அவர் அந்த வாய்ப்புக்களைப் பெற்றிருந்தார் (12:25; 15:2-4; முதலியன). [25]மனந்திரும்புதலின் அர்த்தமும் முக்கியத்துவமும் இவ்விடத்தில் விளக்கிக் கூறப்பட வேண்டியது தேவையாகும். இந்த விளக்கத்தில் வசனம் 18ல் உள்ள “அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கு ... திரும்பும்படிக்கு” என்ற வார்த்தைகளும் உள்ளடக்கப்பட முடியும். “அப்போஸ் தலருடைய நடபடிகள், பாகம் 1” இதழில் சொற்பொருள் அகராதியில் “Repent” - “மனந்திரும்புதல்” என்ற வார்த்தையின் கீழ் காணவும். [26]KJVயில், “That Christ ... should be the first that should rise from the dead” என்று உள்ளது, இது இவ்வசனப் பகுதியை கொலோ. 1:18 மற்றும் 1 கொரி. 15:20க்கு ஒத்தது ஆக்குகின்றது. மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்ததில் முதலாமவராக இயேசு இருப்பதில்லை, ஆனால் மறுபடியும் மரணம் அடையாமல் இருக்கும்படி சரீரத்தில் உயிர்த்தெழுதல் என்பதில் இயேசுதான் முதலாமவராக இருக்கின்றார். மூலபாஷையில் “முதல்வர்” என்பது எப்படிப்பட்ட சிறுமாற்றமுடையது என்று தெளிவாகக் காணப்படு வதில்லை. NASBயில் இவ்வார்த்தையானது சுவிசேஷ அறிவிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. [27]பவுல் ஒரு ரபீ ஆவதற்குக் கல்விகற்ற விபரத்தைப் பெஸ்து அறிந்திருக்கலாம். ஒருவேளை பவுல் தமது சிறையறையில் தமது தோற்சுருட்டுகளை முடிவில்லாது படித்துக் கொண்டிருந்ததைப் பெஸ்து கண்டிருந்திருக்கலாம் (2 தீமோ. 4:13ஐக் காணவும்). ஒருவேளை பவுல் தமது உரையில் வார்த்தைகளை திறமையுடன் பயன்படுத்தியதினால் பெஸ்து கவரப்பட்டிருக்கலாம். [28]இதை, லூக். 1:3; அப். 23:26; 24:3 ஆகியவற்றுடன் ஒப்பிடவும். தனிநபர் ஒருவருக்கு நாம் மரியாதை செலுத்த முடியாது என்னும் போது, அவர் வகிக்கும் பதவிக்கு மரியாதை செலுத்துவது என்பதற்கு இது இன்னு மொரு எடுத்துக்காட்டு ஆகும். [29]ஆங்கிலத்தில் தெளிவாய் இல்லையென்றாலும், கிரேக்க மொழியில், “மூர்க்கவெறி” (வ. 11), “பயித்தியக்காரன்” (வ. 24), “பிதற்றல்” (வ. 24) மற்றும் “புத்தியற்றவன்” (வ. 25) போன்ற வார்த்தைகள் யாவும் *manei* என்ற கிரேக்க வார்த்தையின் மாற்றுருவங்களாகவே உள்ளன - இதிலிருந்தே நாம் “ma-

niac", "manic" *மற்றும்* "mania" *என்ற வார்த்தைகளைப் பெற்றுள்ளோம்.* [30]"S"*ஐக் கொண்டு தொடங்கும் மூன்று வார்த்தைகள் இவ்விடத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளன. இவை* Jimmy Allen*னின் நூலில் இருந்து தழுவப் பெற்றவையாகும்.* [31]*முப்பது அல்லது அதற்கு மேற்பட்ட சில வருடங்களுக்கு முன்பு, ஆண்களையும் பெண்களையும் கட்டுவிக்க (9:2; 26:10) பவுல் தயங்கியிருந்ததில்லை, ஆனால் இப்பொழுதோ அவர், அது யாருக்கும் நடக்கக் கூடாதென்று விரும்பினார்.* [32]*அகிரிப்பா "கிறிஸ்தவராவது" என்பது பற்றியும், பவுல் "என்னைப் போலாகுதல்" என்பது பற்றியும் பேசியதைக் கவனியுங்கள். கிறிஸ்தவராய் இருப்பது எப்படி என்பதைப் பவுலின் வாழ்க்கை விவரிக்கின்றது.* [33]*பவுல் இராயனுக்கு அபயமிட்ட பிறகு, தேசாதிபதி அவரை இராயனிடத்திற்கு அனுப்ப வேண்டியது ஒன்றுதான் அவர் செய்யக் கூடியதாயிருந்தது. இராயனுக்கு அபயமிட்டதில் பவுல் சரியானதைச் செய்தாரா அல்லது தவறானதைச் செய்தாரா என்பது பற்றிய குறிப்புகளைக் காணவும்.*